விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 170 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 24 செவ்வாய்க்கிழமை (07.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



## யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு இன்று முதல் மண்ணெண்ணெய்

(யாழ்ப்பாணம்)

கமநல சேவைகள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் அட்டைகளுக்கு இன்று முதல் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசனின் அறிவுறுத்தலில் கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணைந்து இந்த நடவடிக்கைகளை இன்று முதல் முன்னெடுக்கவுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்குவதற்கு அவர் 15



‘என்னைத் தேட வேண்டாம்’ என

## கடிதம் எழுதி வைத்துவிட்டு முல்லையில் சிறுமி மாயம்

### பொலிஸில் முறைப்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மூங்கிலாற்று பகுதியில் 12 வயதுடைய சிறுமி ஒருவர் கடிதம் எழுதி வைத்துவிட்டு காணாமல்போயுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி இரவு நித்திரை கொள்ளச் சென்ற சிறுமி அதி 15



## அமைச்சர் பிரசன்னவுக்கு இரு வருட கடூழிய சிறை!

25 மில்லியன் ரூபாய் அபராதமும் விதிப்பு 7

அரச சேவையை தடையின்றி முன்னெடுக்க

## குறைநிரப்பு பிரேரணை பாராளுமன்றத்துக்கு

### இன்று சமர்ப்பிக்கவுள்ளார் பிரதமர்

### நாட்டின் நிலை தொடர்பிலும் விசேட உரை ஆற்றுவார்



*(கொழும்பு)*

*அத்தியாவசிய அரச சேவையை தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று பாராளுமன்றத்தில் 69 ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கான குறைநிரப்பு பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளார்.*

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## இம்மாத நடுப்பகுதியில் எரிபொருள் விலை எகிறும்



(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக இம்மாத நடுப்பகுதியில் நாட்டில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் என்று ஐக்கிய தொழிற் சங்க ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இதன்படி மண்ணெண்ணெய் உள் 15

## குளவி கொட்டியதில் முதியவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை - சக்கோட்டைப் பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 15

## பதவிக்காலம் நிறைவடையாது பதவியிலிருந்து விலகமாட்டேன்

### அடம்பிடிக்கும் கோட்டா



(கொழும்பு)

தோல்வியடைந்த ஜனாதிபதியாக தம்மால் பதவியிலிருந்து வெளியேற முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே ஜனாதிபதி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். 15

*அன்பு வாசகர்களே!*
நாளை தொடக்கம்
உங்கள் **வலம்புரி**யில்
கலாநிதி **தவலிங்கம்** எழுதும்

## உக்ரைன் போர்

தொடர் வெளிவரும்
வாசிக்கத் தவறாதீர்கள்...

சுகாதாரம், கல்வி தவிர்ந்த

## அரச உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்தவாறு கடமை

### தயாராகிறது புதிய திட்டம்

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்கள் வீடுகளிலிருந்து வேலை செய்வதற்கான திட்டம் ஒன்றை வகுப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாக பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு 15

## ஓமானிலிருந்து யூரியா உரம்

### இந்தியா நடவடிக்கை

(கொழும்பு)

ஓமானில் இருந்து நேரடியாக இலங்கைக்கு யூரியா உரத்தை அனுப்பி. வைப்பதற்கு இந்தியா நட வடிக்கை எடுத்துள் ளது.

இலங்கைக்கு 65 15

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு 23 வயது இளைஞன் பலி



(கொழும்பு)

கொழும்பு - முகத்துவாரம் ரெட்பானாவத்த பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் 23 வயதான இளைஞரொருவரே உயிரிழந்துள்ள 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பெரமுனவிடமே பெரும்பான்மை உள்ளது மகிந்த மீண்டும் பிரதமராகலாம்

## முன்னாள் அமைச்சர் பஸில் மிரட்டல்



(கொழும்பு)

**பிரதமர் பதவியிலிருந்து விலகிய மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராகினாலும் அதிசயம் இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான மகிந்த ராஜபக்ஷ அழுத்தங்களுக்கு அடிபணிந்து பிரதமர் பதவியிலிருந்து விலகவில்லை. அவர் சுயவிருப்பின் பேரிலேயே பதவி விலகினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியிடமே பெரும்பான்மைப் பலம் தொடர்ந்தும் உள்ளது. எனவே, பிரதமர் பதவியிலிருந்து விலகிய மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராகினாலும் அதிசயம் இல்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுயவிருப்பத்துக்கிணங்கவே புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். அதற்காக ரணிலின் நியமனத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் எதிர்ப்பு என்று அர்த்தம்கொள்ள முடியாது.

ஜனாதிபதி - பிரதமர் இணைந்து முன்னெடுக்கும் நாட்டின் முன்னேற்றகரமான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆதரவு வழங்கும்" எனவும் தெரிவித்தார். (4-7)

## பாராளுமன்ற உறுப்பினரின் மகன், மருமகள் கைது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலீப் வெத ஆராச்சியின் மகன் மற்றும் மருமகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நெடுஞ்சாலை பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்த குற்றத்திற்காக வீரகெட்டிய பொலிஸ் நிலையத்தில் குறித்த இருவரும் சரணடைந்த நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (4-7)


உ
சிவமயம்



வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்

**ஆலய வருடாந்த பொங்கல் விழா**

**10.06.2022 வெள்ளிக்கிழமை**

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்மவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

**அம்பிகை அடியார்களே!**

வன்னிவிளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் சுபகிருது வருஷம் வைகாசித் திங்கள் 27ம் நாள் (10.06.2022) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 9.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமைபோல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள். அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவைச் சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:-

1. அடியார்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி (முகக்கவசம்) அணிந்து ஆலயத்திற்கு வருகைதர வேண்டும்.
2. பொங்கல் தினத்தன்று விஷேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
3. பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
4. பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 08.06.2022 காலை 10.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள் என்பதை அறியத்தருகின்றோம்.
5. உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப்பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
6. உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
7. மூடியுடன்கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத் தாள் பாவனை, உணவு இடுக்கிப் பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை,
வன்னிவிளாங்குளம், மாங்குளம். சுபம்


## ரணிலை பதவியிலிருந்து அகற்ற திரைமறைவில் பஸில் சதி

(கொழும்பு)

ரணில் விக்திரமசிங்க பிரதமராகி பல வாரங்கள் ஆகியும் இதுவரை வாக்குறுதி அளித்தபடி பல பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணியை கொண்டு வர முடியவில்லை.

மக்கள் மூன்று வேளை உணவு உண்ணக் கூடிய சூழலை உருவாக்குவதற்காக, விலைவாசியை குறைக்க முடியவில்லை என சமூக ஆர்வலர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

அதுமட்டுமன்றி இவ்வாறான விடயங்களை அடிப்படையாக கொண்டு ரணிலுக்கு எதிரான பிரசார நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரணிலை பதவியில் இருந்து அகற்றும் வேலைகளை திரைமறைவில் இருந்து பஸில் ராஜபக்ஷ மேற்கொண்டு வருகிறார் எனவும், இதனொரு கட்டமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்து விட்டார் என கூறி "Ranil fail" என்ற பிரசாரத்தை முன்னெடுக்க பொதுஜன பெரமுன சார்பு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் தயாராகி வருகின்றனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியினால் கோட்டாபயவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வெற்றிகரமான "sir Fail" பிரசாரத்தைப் போன்று "Ranil fail" பிரசாரமும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## பொதுமக்கள் கஷ்டத்தில் அரசு சுகபோகத்தில்

### ஜே.வி.பி. சாடல்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களினதோ அல்லது ஏனைய அதிகாரிகளினதோ சிறப்புரிமையை அரசாங்கம் குறைக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

மக்கள் கடும் இன்னல்களுக்கு உள்ளாகி வரும் வேளையில் கூட இவற்றை செய்யவில்லை என அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றம் சுாட்டியுள்ளார்.

அமைச்சர்களின் உத்தியோகபூர்வ வாகனங்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், சம்பளம் அல்லது ஏனைய சலுகைகள் குறைக்கப்படவில்லை என சுட்டிக்காட்டினார்.

தற்போதைய அரசாங்கம் மீது பொது மக்கள் அதிருப்தி கொண்டுள்ள நிலையில் தேர்தலின் மூலம் மட்டுமே அதனை சரிசெய்ய முடியும் என சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். (4-7)

## முன்னாள் பிரதமர் மகிந்தவின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கைது

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்புச் செயலாளர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மே 9 காலிமுகத்திடல் தாக்குதல் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேகநபர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, அவரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், சந்தேகநபரை குறித்த தினத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (4-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொலர் கையிருப்பு பூஜ்ஜியம்

## ரணில் பகிரங்கம்

(கொழும்பு)

**இலங்கையில் தற்பொழுது டொலர் கையிருப் பானது பூஜ்ஜியம் என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தை நான் ஒப்படைக்கும் போது ஏழரை பில்லியன் டொலர்கள் இருந்தன. எனினும் அவை தற்போது இல்லை.

இருப்பினும் அதனை சமாளித்து நாட்டை பொறுப்பேற்க ஒருவர் தேவை. அந்த பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன்.

எனது தலைமையின் கீழ் அமைக்கப்பெற்ற அமைச்சரவையில் பல்வேறு கட்சிகளை சேர்ந்த பிரதிநிதிகள் உள்ளனர். அனைவரும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம். அதனை தவிர்ப்பதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த நெருக்கடி தருணத்தில் இந்தியா அளப்பரிய உதவிகளை செய்து வருகின்றது.

அதேபோல் சர்வதேச நாணய நிதியத்திடமும் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டு வருகின்றோம்.

இருப்பினும் இன்னும் சில நாட்களில் 30 - 40 மில்லியன் டொலர்கள் கையிருப்பு இருக்கும் எனவும் தெரிவித்தார். (நி-6)

## எரிவாயுவுடன் நாட்டிற்கு வந்த கப்பல்



(கொழும்பு)

2,000 மெற்றிக் தொன் எரிவாயு ஏற்றிய கப்பலொன்று நேற்று திங்கட்கிழமை காலை இலங்கையை வந்தடைந்துள்ளது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. (நி-6)

## சீமெந்து மூடை ஒன்றின் விலை 4000 ரூபாவாக அதிகரிக்கும்



(கொழும்பு)

எதிர்காலத்தில் சீமெந்து மூடை ஒன்றின் விலை 4000 ரூபாவை தாண்டும் என தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது.

வரி அதிகரிப்புடன் சீமெந்து விலையும் அதிகரிக்கும் என அச்சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சீமெந்து மூடை ஒன்றின் விலை 3000 ரூபாவை அண்மித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் வரி அதிகரிப்பினால் சீமெந்து விலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

# வெதுப்பக உணவுகளின் விலைகளை மேலும் அதிகரிக்க திட்டம்

(கொழும்பு)


எதிர்காலத்தில் பணிஸ் உட்பட வெதுப்பக உணவுகளுக்கான விலைகள் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ரொட்டி தவிர்ந்த அனைத்து பேக்கரி பொருட்களுக்கும் வெதுப்பக உரிமையாளர்கள் 12 சதவீத வற்வரி செலுத்த வேண்டியிருப்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

வற் வரியை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒரு பணிஸின் விலை பத்து ரூபாவினால் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறு பேக்கரி உரிமையாளர்களுக்கு வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டாலும், அனைத்து வெதுப்பக உரிமையாளர்களில் 60 சதவீதத்தினர் உரிய வரியை செலுத்த வேண்டும்.

மேலும், வெதுப்பக உரிமையாளர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வற் வரியில் இருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்றும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



இதேவேளை பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக சுமார் 2000 சிறிய அளவிலான பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-6)

# முடிவடையும் இந்தியக் கடனுதவி மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு?

(கொழும்பு)


இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் எரிபொருள் முடிவடையும் தருவாயில் உள்ளதால் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியம் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எரிபொருள் காரணமாகக் கடந்த மாதம் இலங்கையில் ஏற்பட்ட பாரிய எரிபொருள் தட்டுப்பாடு ஓரளவுக்குச் சீர்செய்யப்பட்டது.

இந்நிலையில் இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் எரிபொருள் நிரப்பிய கடைசிக் கப்பல் எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளது.

அத்துடன் இலங்கைக்கான இந்தியக் கடனுதவித் திட்டம் பூர்த்தியாகிவிடும். இலங்கையின் டொலர் கையிருப்பு கடுமையான பற்றாக்குறையில் காணப்படும் நிலையில் புதிதாக டொலர்களை தேடிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாது போனால் மீண்டும் எரிபொருள் பற்றாக்குறை தீவிரமாக ஏற்படும் அபாயம் உள்ளதாக எரிபொருள் கூட்டுத்தாபன அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (நி-6)

# இலங்கையில் முதலாவது வீதி நூலகம்




(கொழும்பு)

கொழும்பு றோயல் கல்லூரிக்கு எதிரே "ரேஸ் கோர்ஸ்" வாகனத்தரிப்பிடத்திற்கு அருகாமையில் இலவச வீதி நூலகம் (Street Library) ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவே இலங்கையின் முதலாவது வீதி நூலகமாகும்.

குறித்த வீதி நூலகம் பாகிஸ்தான் அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் 2.3 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகம் 24 மணி நேரமும் திறந்திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் புத்தகங்கள் காணப்படுகின்றன.

இந்நூலகம் ஏனைய நூலகங்களை விட வித்தியாசமானது. "புத்தகம் ஒன்றை வைத்துவிட்டு, புத்தகம் ஒன்றை எடுத்தல்" என்ற அடிப்படையில் இந்நூலகம் செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கே நூலகர் என்று யாரும் இல்லை. எவரும் இங்கு வந்து புத்தகங்களைப் படிக்கலாம். மேலும், வாசகர்கள் புத்தகங்களை எடுத்துச் செல்லும் போது தங்கள் விருப்பப்படி வேறு புத்தகங்களை நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். (நி-6)

## எரிவாயு விலை அதிகரிக்கப்படாது

### லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

எரிவாயு விலை திருத்தம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்திகளை லிட்ரோ நிறுவனம் நிராகரித்துள்ளது.

எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவில்லை என லிட்ரோ நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 12.5 கிலோ கிராம், 5 கிலோ கிராம் மற்றும் 2.3 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நாளை புதன்கிழமை வரை விநியோகிக்கப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கையிருப்பில் போதியளவு சமையல் எரிவாயு இல்லாமையால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், 2000 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள நிலையில், அவற்றை தரையிறக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கை இடம்பெறுவதாகவும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நெருக்கடிக்கு உதவும் கிரிக்கெட் நிறுவனம்

(கொழும்பு)

இலங்கைக்கான அவுஸ்திரேலியா சுற்றுப்பயணத்தின் டிக்கெட் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தையும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் முடிவு செய்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகரத்தினம் நினைவு வெற்றிக்கிண்ணம்

# மயிலிட்டி தையிட்டி ஸ்டார்ஸ்போட்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன்







யாழ்ப்பாண பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாபா சிரேஷ்ட அதிகாரியின் ஆலோசனைக்கும் மேற்பார்வைக்கும் அமைவாக யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட எஸ். நாகரத்தினம் நினைவு வெற்றிக் கிண்ண மென்பந்து பந்து துடுப்பாட்டப் போட்டியானது மயிலிட்டி தையிட்டி ஸ்டார் ஸ்போட்ஸ் விளையாட்டு மைதானத்தில் கடந்த 4 ஆம் திகதி நடத்தப்பட்டது.

இப்போட்டியானது மயிலிட்டி தையிட்டி ஸ்டார் ஸ்போட்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் கோப்பாய் பல்மெறா கழகத்துடன் நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கோப்பாய் பல்மெறா கழகமானது முதலில் துடுப்பாட்டத்தினை ஆரம்பித்து 12 ஓவர் முடிவில் 08 விக்கெட் இழப்பில் 79 புள்ளிகளைப் பெற்று வெளியேறியது. இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய மயிலிட்டி தையிட்டி ஸ்டார் ஸ்போட்ஸ் விளையாட்டுக் கழகம் 09 ஓவர் 04 பந்துகளில் 01 விக்கெட் இழப்பில் 85 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது.

இதன் ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாபா சிரேஷ்ட அதிகாரி, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ , 51,52 ஆவது காலாட்படை தளபதிகள், மயிலிட்டி கிராம உத்தியோகத்தர் திருமதி.எஸ்.நாகரத்தினம் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4)

# நடால் சம்பியன்



பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், வெற்றி பெற்று கிளே ஒஃப் த கிங்' என வர்ணிக்கப்படும் ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடால், சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், ஸ்பெயினின் ரபேல் நடாலும், நோர்வேயின் கேஸ்பர் ரூட்டும் பலப்பரீட்சை நடத்தினர்.

ஆரம்பம் முதலே ஆக்ரோஷமாக விளையாடிய நடால், 6-3, 6-3, 6-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

இதன் மூலம் 14 ஆவது முறையாக பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் சம்பியன் பட்டத்தை வென்றார். அத்துடன், இது அவருக்கு 22 ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டம் ஆகும். (4)





கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் 19 வயதுக்கு உட்பட்ட இலங்கை தேசிய கிரிக்கெட் அணியில் இடம்பிடித்துள்ள கிளிநொச்சி புனித தெரேசா மகளிர் கல்லூரி மாணவி சதாசிவம் கலையரசியினைப் பாராட்டிப் பரிசில் தொகை வழங்கிக் கௌரவித்தார். இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், மாவட்டச் செயலக அதிகாரிகள், யாழ்.இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள் - ரவிசாந், சிவசாந்தன், யதுபாஸ்கரன்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2633

Search for people, places and things

**ரமணா**

ஓரிடத்தில் நீ காட்டும் கருணை...
கோடி மடங்காய் உன்னிடம் திரும்ப வரும்



**அக்ஷகா**

எல்லோரின் செயல்களையும்
விமர்சிக்க இங்கு ஒரு கூட்டம்
உள்ளது. அதை நீ கண்டு
கொள்ளாமல் இருந்தால் உன்
வாழ்க்கைக்கு நல்லது

**கதிர்**

நீங்கள் கோபமாக இருக்கின்றீர்கள்
என்பதற்காக அவசரப்பட்டு
கடுமையான வார்த்தைகளை
மற்றவர்கள் மீது எறிந்து
விடாதீர்கள். உங்களது கோபங்கள்
மறையக் கூடும். ஆனால் உங்களது
வார்த்தைகள் உள்ளத்தைக்
கிழித்ததால் வந்த காயங்கள்
ஆறுவது அத்தனை
இலகுவானதல்ல !

**நிசாந்த்**



தான் மட்டும்
புத்திசாலி
அடுத்தவனுக்கு
ஒன்றும்
தெரியாது
என்று
நினைப்பவன்
உலகின்
முதல்
முட்டாள்

**வைசாலி**

சிரிக்க வைத்த உறவுகள்
சில நிமிடங்களே
நினைவில் இருக்கும்.
ஆனால் அழ வைத்த
உறவுகள் சாகும்வரை
நினைவில் இருக்கும்.

**கிருஷ்ணா**

கழுகுகளுடன் பறக்க வேண்டுமென்றால்
வாத்துக்களுடன் நீந்துவதை
நிறுத்த வேண்டும்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய அரசாங்கம் பதவி விலகினால்

# டொலர்களை சேர்க்க நாம் தயார்

## ஜெனிவா கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிப்பு




(ஜெனிவா)

ஐரோப்பாவில் வசிக்கும் பெருந்தொகையான இலங்கையர்கள் நேற்று முன்தினம் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாக "கோட்ட கோ கம" கிளை ஒன்றையும் அவர்கள் நிறுவியுள்ளனர்.

இந்த நிகழ்வில் இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஐக்கிய இராச்சியம் உட்பட ஐரோப்பாவில் வாழும் பெருமளவான இலங்கையர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் காலை இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதுடன், ஜெனிவாவில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு பல மணிநேரம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கமே நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

எனவே பாரிய வாழ்க்கைச் சுமையால் அவதியுறும் மக்களை மேலும் ஒடுக்காமல் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய அரசாங்கம் பதவி விலகி திருட்டு, மோசடி மற்றும் ஊழல் அற்ற அரசாங்கத்தை ஏற்படுத்தினால், அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிக்க, இலங்கை பொருளாதாரத்திற்கு டொலர்களை சேர்க்க தாம் தயாராக இருப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், அதற்கான நம்பகமான பொருளாதாரத் திட்டமொன்று இலங்கையில் இருக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். (நி-6)

1ம் ஆண்டு நினைவஞ்சலி



உதிர்வு-20.05.2021

அமரர். தம்பிப்பிள்ளை சங்கரசிவம்

வாழ்வும் வளமும் தந்த வள்ளலே
இயல்பறிந்து உதவும் கண்ணப் பிரபுவே
மனதார நாம் நேசிக்கும் நல் முதலாளியே
தினமும் நல் மனம் கொண்ட கடவுளே
நீளும் காலம் யாவும் இப்புவியில்
வாழும் உங்கள் பெயர் என்றுமே....

15/9 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(11765)

தங்கள் நினைவுகளுடன்
பி.றகுராஜா குடும்பம்

## ரஷ்யாவுக்கான

# தபால் விநியோகம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ரஷ்யாவிற்கு தபால் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இருந்து ரஷ்யாவுக்கான வர்த்தக விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள காரணத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், விமானப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டவுடன் ரஷ்யாவுக்கான தபால் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-6)

# இராசிபலன்

07.06.2022
வைகாசி 24, செவ்வாய்க்கிழமை
அட்டமி பின்னிரவு 4.19 மணிவரை

பூரம் பின்னிரவு 12.13 மணிவரை
சுபநேரம் -10.22-11.52 மணிவரை
இராகுகாலம் -2.52-4.22 மணிவரை

சந்திராஷ்டமம்-
திருவோணம், அவிட்டம்.

வளவன்

**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அமைப்புகள் வந்து சேரலாம்.

**துலாம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள்,சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** செய்தொழில் மேன்மையுண்டு, பொது நல ஈடுபாடு அதிகரிக்கும்,உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மையுண்டு.

**கும்பம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** குடும்ப உறுப்பினர்களிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**கன்னி** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கைகள் எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**மீனம்** அலுவலகப் பணிகள் சாதகமாக அமையும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

நலமாக இருக்கும்போதே நோயைப்பற்றி தெரிந்து கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு முகாம்களில் உள்ள ஈழத்தமிழர்களை விடுவியுங்கள்

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலினிடம் கஜேந்திரன் எம்.பி.கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**


**தமிழகத்தின் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்ற தமிழக முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு இது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழகத்தின் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்து வரும் நிலையில் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது.

இந் நிலையில் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் இதுவரையில் நிறைவேற்றப் படாதமை உண்மையில் ஏமாற்றத்தையும் மன வேதனையும் தருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை யுத்தம் காரணமாகவே இங்கிருந்து பலரும் வெளிநாடுகளுக்குச் சென்ற நிலையில், அவ்வாறு வருவர்களுக்கு அடைக்கலம் தருவதாக கூறி கொண்டே ஈழத்தமிழர்களை சிறப்பு முகாம்களில் அடைத்து வைத்திருப்பது என்பது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். ஆகவே அவர்களை விடுவிப்பதற்கு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விடயத்தில் தமிழக முதலமைச்சர் உடனடியாக தலையிட்டு அவர்களின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (4-6-33)



# வரணியில் விபத்து இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வரணி வீதி ஊடாக துவிச்சக்கரவண்டியில் பயணித்த முதியவரை அவ் வழியே சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

படுகாயமடைந்த இருவரையும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



சாவகச்சேரிப் பகுதியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய 25 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு நேற்று திங்கட்கிழமை காலை இராணுவத்தின் 7 ஆவது விஜயபாகு காலாற்படையணியின் ஏற்பாட்டில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-சுபேசன்)

# ஆலயத்தை தரிசிக்க வந்த மூதாட்டியின் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோவிற்குடியிருப்பு கிராமத்தில் உள்ள கிருஷ்ணர் ஆலயத்தை நேற்று திங்கட் கிழமை காலை சுற்றிக் கும்பிட்ட வயோதிபப் பெண்ணின் சங்கிலியை இனந்தெரியாத நபர் ஒருவர் அறுத்துக்கொண்டு தப்பித்துச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த வயோதிபப் பெண் ஆலயத்தை சுற்றிக் கும்பிட்ட பின்னர் ஆலய வாசல் பகுதியில் நின்று ஆலயத்தை இரு கை கூப்பி வணங்கிய வேளையில் பின்புறமாக வந்த திருடன் வயோதிப பெண்ணின் ஒன்றரைப் பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளார்.

பெரியமாவடி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 67 வயதான வயோதிப பெண் ஒருவரின் சங்கிலியே இவ்வாறு அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த சாதரணதர பரீட்சையில் விஞ்ஞான பாட அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு பங்காற்றிய ஆசிரியர்களை கௌரவித்தல் நிகழ்வு நேற்று கிளி/சென்திரேசா மகளிர் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.பரணீதரன் தலைமையில் நடைபெற்றது.

# போக்குவரத்து தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் - வைமன் வீதியின் இரண்டு பக்கமும் அமைக்கப்பட்ட வடிகால்களினை இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில், அவ்வீதியூடான போக்குவரத்துக்கள் அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்கு தடைபட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6-18-33)

# கணவன் தாக்கியதில் மனைவி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கணவனின் தாக்குதலுக்கு இலக்கான மனைவி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கத்தானைப் பகுதியைச் சேர்ந்த 43 வயதான குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு கணவனின் தாக்குதலுக்கு இலக்காகி பற்கள் உடைந்து முகத்தில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# யாழ்.பல்கலையினுள் அட்டகாசம் புரிந்த இருவர் மடக்கி பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தினுள் அத்துமீறி நுழைந்த வெளியாட்கள் இருவர் அங்கிருந்த பல்கலைக்கழக மாணவிகள் மீது தாக்குதல் நடத்திய சமயம் மாணவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

யாழ். பல்கலையில் தியாகி பொன்.சிவகுமாரன் நினைவு தினம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. அதற்காக மாணவர்கள் அங்கு வருகை தந்திருந்தனர்.

அந்த நிகழ்வு முடிவுற்ற பின்னர் பல்கலைக் கழக வளாகத்துக்குள் நின்ற மாணவிகள் மீது வெளியில் இருந்து வந்த இருவர் திடீரென தாக்குதல் நடத்தினர்.

பின்னர் அங்கிருந்த ஆண் மாணவர் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்த முற்பட்டபோது ஏனைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து அந்த இருவரையும் மடக்கினர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, அங்கு வந்த பொலிஸார் தாக்குதல் நடத்திய இருவரையும் கைது செய்தனர். (4-6-33)



யாழ்ப்பாண பாதுகாப்பு படை கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத்யாபா சிரேஷ்ட அதிகாரியின் வழிகாட்டலுக்கு அமைவாக உலக சூழல் தினத்தினை முன்னிட்டு நேற்று முன்தினம் யாழில் கடற் கரையோரங்கள் பல இராணுவ வீரர்கள் மற்றும் பிரதேச மக்களினால் தூய்மையாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பொதுமக்களுக்கு தென்னங்கன்று வழங்குதல் போன்ற செயற்றிட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிலோ அரிசியின் விலை 500 ரூபாவாக உயரும் அபாயம்

**(கொழும்பு)**

**அடுத்த சில வாரங்களில் ஒரு கிலோ அரிசியின் விலை 500 ரூபாவாக உயரும் நிலை காணப்படுவதாக சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.**



நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

உணவுப் பற்றாக்குறை, நெல் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு போன்றவற்றால் நடுத்தர மக்கள் அரிசியை குவிக்கத் தொடங்கியுள்ளமையே இந்த நிலைமைக்கு காரணம் என குறிப்பிட்டுள்ளனர்.

நடுத்தர மக்கள் தற்போது கிராமங்களில் இருந்து பத்து முதல் பதினைந்து மூட்டை நெல் எடுக்கின்றனர். சிறிய நெல் ஆலை உரிமையாளர்கள் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்ய நெல் போதுமானதாக இல்லை. குறுகிய காலத்தில் அரிசியின் விலை சுமார் 500 ரூபாய் வரை உயரும் என அநுராதபுர மாவட்ட சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் யு.கே.சேமசிங்க தெரிவித்தார்.

இதனிடையே சாக்கு, எரிபொருள், கூலி, உதிரிப்பாகங்கள், போக்குவரத்து செலவு உள்ளிட்ட அரிசியின் மொத்த செலவு உயர்ந்துள்ள சூழலில், ஒரு கிலோ அரிசி உற்பத்திச் செலவு 250 ரூபாவாக உள்ளது.

இதேவேளை, ஒரு கிலோ அரிசியின் விலையை மேலும் 20 ரூபாவினால் அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.பி.ரஞ்சித் தெரிவித்துள்ளார். (நி-6)

# இந்திய முதலீடுகளால் வடமாகாண மக்கள் பலனை அனுபவிப்பார்கள்

## யாழ்.இந்திய துணைத்தூதுவர்

(நெளுக்குளம்)

இந்திய முதலீடுகளால் வட மாகாண மக்கள் பலனை அனுபவிப்பார்கள் என இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று அட்சயபாத்ரா உதவிகள் எனும் தொனிப்பொருளில் இந்திய மக்களின் நிவாரணப்பொருட்களை வழங்கி வைக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், வட மாகாணத்தில் இரண்டு இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நிவாரணம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது முதற்கட்டமான உதவியே. தமிழ்நாட்டில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் இன்னும் நிவாரணப் பொதிகள் வந்து கொண்டிருக்கின்றன.

அரிசி மற்றும் பால்மா இதன்போது கையளித்துள்ளோம். யாழ்ப்பாணம் தீவுப்பகுதியில் உள்ள மீனவர்களுக்கு 17000 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கி வைத்திருந்தோம். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு தேவையான மருந்துபொருட்கள் மருத்துவ உபகரணங்களும் வழங்கி வைத்திருந்தோம். இன்னும் மருந்துகளும் மருத்துவ உபகரணங்களும் வந்து கொண்டிருக்கின்றன.

இந்தியாவில் இருந்து முதலீடு மற்றும் தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்களை கொண்டு வரவும் நாம் செயற்பட்டு கொண்டிருக்கின்றோம். மிக விரைவில் இதற்கான பலனை வட மாகாணத்தில் காண்போம்.

அத்துடன் தனிப்பட்ட முறையில் சில மீனவர் சங்கத்தில் இருந்து மண்ணெண்ணெய் கோரி கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

அதனை உத்தியோகபூர்வமாக அரசாங்க அதிபரூடாக அல்லது வட மாகாண செயலாளர் ஊடாக தொகுத்து எடுத்து வருமாறு கோரியுள்ளோம். அவ்வாறு வந்தால் பரிசீலனை செய்யலாம் என தெரிவித்தார். (4-6-299)

# உணவுகள் வீணாவதை தவிர்க்குமாறு சமையற்கலை நிபுணர் கோரிக்கை

(கொழும்பு)

சமைத்த உணவை வீணாக்குவதைத் தவிர்க்குமாறு இலங்கையின் பிரபல சமையற்கலை நிபுணர் பப்லிஸ் சில்வா பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல விடுதிகள் மற்றும் வீடுகளில் 60 சதவீத உணவுகள் இன்னமும் வீணடிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்கு மரக்கறிகளை கொள்வனவு செய்ய வருகை தரும் வர்த்தகர்களின் எண்ணிக்கை 80 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

# அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு கடூழிய சிறைத்தண்டனை விதிப்பு

(கொழும்பு)

மீதொட்டமுல்ல காணி வழக்கில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டின் அடிப்படையில் அப்போதைய மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அவரது மனைவி மொரீன் ரணதுங்க மற்றும் நரேஷ் குமார் பரீக் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் 15 குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 25 மில்லியன் ரூபா அபராதமும் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# ரஷ்ய விமானத்திற்கான தடை உத்தரவை இடைநிறுத்தியது மேல் நீதிமன்றம்

(கொழும்பு)

ஏரோப்ளோட் விமானம் இலங்கையை விட்டு வெளியேற விதிக்கப்பட்ட தடை உத்தரவை இடைநிறுத்தி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த குறித்த விமானம், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டது.

குத்தகை பிரச்சினை காரணமாக இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த விமானத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்த பயணிகள் நேற்று முன்தினம் ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த பிரச்சினை காரணமாக, இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான வணிக விமான சேவைகளை ரஷ்ய ஏரோப்ளோட் நிறுவனம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளது. (நி-6)

# புத்தகங்கள், சீருடைகள் தந்துதவுமாறு இந்தியா, சீனாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் மற்றும் பாடநூல் புத்தகங்கள் தொடர்பில் சீனா மற்றும் இந்தியாவின் உதவியைக் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இது தொடர்பாகக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஹேமந்த பிரேமதிலக தனியார் வானொலியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகளை வழங்கத் தேவையான துணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகச் சீனாவுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வெற்றி பெற்றுள்ளதாகவும், தேவைப்படும் துணியில் பாதியளவு துணியை தந்துதவ சீனா இணங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று பாடநூல்களை அச்சிடுவதற்குத் தேவையான கடதாசியை இந்தியாவிலிருந்து கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# இலங்கை-ரஷ்யா உறவை பாதுகாக்குமாறு வலியுறுத்தி போராட்டம்

(கொழும்பு)

இலங்கை - ரஷ்யாவுக்கு இடையிலான உறவை பாதுகாக்குமாறும் அதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தி ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.




கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள பிரதமரின் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது

ரஷ்யாவின் கல்வி கற்ற இலங்கையர்கள் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய சிலர் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ரஷ்யாவின் 'ஏரோபுளோட்' விமானம் ஒன்றினை இலங்கையில் இருந்து வெளியேற தடை விதித்து, கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 64

# பணிவு அறிவைவிட மேலானது



நடிகர் அமிதாப் ப்ச்சன்: தனது வாழ்க்கையில் புகழின் உச்சக் கட்டத்தில் இருந்த போது, விமானம் ஒன்றில் ஒரு முறை பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

தனக்கு அருகில் இருந்த பயணி, ஒரு சாதாரண சட்டை,பேண்ட் அணிந்து அமர்ந்திருந்த வயதான மனிதர், நடுத்தர வர்க்கம் போலவும் நன்கு படித்தவர் போன்று அவரின் தோற்றம் காணப்பட்டது.

நான் யார் என்பதை சக பயணிகள் கண்டு கொண்டதையடுத்து என் இருக்கையின் அருகில் வந்து ஹலோ சொல்லி கை கொடுத்து விட்டுச் சென்றனர்.

ஆனால், இந்த மனிதர் மட்டும் என் இருப்பை உணரவும் இல்லை.

என்னை கண்டு கொள்ளவும் இல்லை. ஒருவேளை, அவர் நாளிதழை உன்னிப்பாக படித்துக் கொண்டிருந்ததால், என்னை கவனிக்கவில்லையோ என எண்ணினேன்.

தேநீர் வழங்கப்பட்ட போது, அமைதியாக அதை எடுத்து, ரசித்து பருக ஆரம்பித்தார். என்னை அவருக்கு யார் என்று தெரியவில்லையா?அல்லது தெரிந்தும் தவிர்க்கிறாரா? என்னால் பொறுத்து கொள்ள முடியாமல்,

அவருடன் ஒரு உரையாடலைத் துவங்கும் முயற்சியில் நான் அவரை பார்த்து சிரித்தேன். அந்த மனிதரும் புன்னகை செய்து, "ஹலோ" என்று சொன்னார்.நாங்கள் பேச ஆரம்பித்தோம். சமூகம், பொருளாதாரம், அரசியல்,என்று பல விடயங்களைப் பற்றி பேசினோம்.

அவரின் பேச்சில், ஒரு லயிப்பும் ஈர்ப்பும், தேர்ந்த ஒரு நேர்த்தியும் இருந்ததை நான் உணர்ந்தேன்.

சினிமா மற்றும் திரைப்படங்கள் சம்பந்தமான விடயங்களை நான் வேண்டுமென்றே அவரிடம் பார்ப்பீர்களா? என வினவினேன்.

ஓ, மிக சில பல ஆண்டுகளுக்கு முன்பு நான் பார்த்திருக்கிறேன் என அந்த மனிதர் பதிலளித்தார்.நான் திரைப்பட துறையில் தான் இருக்கிறேன் என்று குறிப்பிட்டேன்.

அப்படியா? ரொம்ப நல்லது. நீங்கள் அந்த துறையில் என்ன செய்கிறீர்கள் என கேட்டார்.நான் ஒரு நடிகர் என பதிலளித்தேன். அவரிடமிருந்து எந்த வித சலனமும் இல்லை. அதன் பின் நாங்கள் இறங்கி வெளியேறும் போது,

உங்களுடன் பயணம் செய்தது மிக்க மகிழ்ச்சி. நல்லது, என் பெயர் அமிதாப் பச்சன் என்றேன்.அந்த மனிதரும் மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டே,

உங்களை சந்தித்த இந்த நாள், நல்ல நாளாக இருக்கட்டும் என கூறி: என் பெயர்: JRD டாட்டா. மோட்டார் தொழில் செய்கிறேன் என்றார் பணிவுடன்.நான் விக்கித்து நின்று விட்டேன். அன்றுதான் நான் கற்றுக் கொண்டேன் பணிவை பற்றி.

பேரையும் புகழையும் வைத்து, நாம் தான் பெரிய ஆள், என்று நினைத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், நம்மை விட வசதியிலும்,

அறிவிலும், படிப்பிலும் உயர்ந்தவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்.எப்போதுமே பணிவாய் பேசுங்கள். நல்ல நடத்தை, பண்பு என்பது அறிவை விட மேலானது. வாழ்க்கையில் பல கால கட்டங்களில்,

அறிவு, பணிவிடம் தோற்றுப் போய் உள்ளது. பணிவும் நல்ல நடத்தையும், எல்லா இடத்திலும் வென்றுள்ளது.

எந்த சூழ்நிலையிலும், பணிவுடனும், அடக்கத்துடனும் நடந்து கொள்ளுங்கள்.அது உங்களை சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் கொண்டு போய் வைக்கும்.



Bosco Thusha

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## உக்ரைனுக்கு ஆயுதம் வழங்கினால் புதிய இலக்குகள் குறிவைக்கப்படும் புடின் எச்சரிக்கை



(மொஸ்கோ)

உக்ரைனுக்கு நீண்டதூர இலக்கை தாக்கும் ஏவுகணைகளை வழங்கினால் புதிய இலக்கை குறிவைத்து தாக்குவோம் என மேற்கத்தேய நாடுகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

100 நாட்களைத் கடந்து நடந்துக்கொண்டிருக்கும் உக்ரைன்- ரஷ்யப் போர், தற்போது தீவிரமடைந்துள்ளது. ரஷ்யப் படைகள், உக்ரைன் படைகளுக்கு கடும் நெருக்கடி கொடுத்து வருவதால் உக்ரைன் மேற்கத்தேய நாடுகளிடம் நீண்டதூர இலக்கை தாக்கும் ஏவுகணைகளை கோரியுள்ளது.

இந்தநிலையில், இதுகுறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் கூறுகையில், 'உக்ரைன் ரஷ்யா இடையிலான போர் நீடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்கத்தேய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத உதவி செய்து வருகின்றன. அந்த ஆயுதங்களில் புதிதாக ஒன்றும் இல்லை. அவை ரஷ்யாவிடம் உள்ள ஆயுதங்களுக்கு நிகரானவைதான்.

உக்ரைனுக்கு நீண்டதூர இலக்கை தாக்கும் ஏவுகணைகளை மேற்கத்தேய நாடுகள் வழங்கினால், உக்ரைனில் இது வரை தாக்கப்படாத இடங்களை குறி வைத்து தாக்குவோம் எனத் தெரிவித்தார்.

எனினும், எந்தப் பகுதி மீது தாக்குதல் நடத்தப்படும் என்பதை புடின் தெரிவிக்கவில்லை. உக்ரைனுக்கு ஹிமார்ஸ் மல்டிபிள் லொஞ்ச்ராக்கெட் அமைப்புகளை வழங்கப் போவதாக கடந்த சில தினங்களுக்கு முன்பு அமெரிக்கா அறிவித்திருந்த நிலையில் புடின் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.(நி-6)

## அமெரிக்காவில் அடுத்தடுத்து 3 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் 9 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடந்த 48 மணி நேரத்தில் நடந்த 3 வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டு கலாச்சாரம் அண்மைய காலமாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக துப்பாக்கி வைத்துக் கொள்ள கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என அமெரிக்காவின் பல பகுதிகளிலும் கோரிக்கைகள் எழுந்தன.

இந்த சூழலில் அமெரிக்காவில் கடந்த 48 மணி நேரத்தில் நடந்த 3 வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.அமெரிக்காவில் இந்த ஆண்டு மட்டும் அந்நாட்டில் 240 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அரங்கேறி உள்ளன.

இதுகுறித்து கவலை தெரிவித்துள்ள ஜனாதிபதி ஜோ பைடன், அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வரும் தருணம் வந்துவிட்டது என்று தெரிவித்துள்ளார். (நி-6)

## நைஜீரிய
## வழிபாட்டு

**(நைஜர்)**
**தென்மேற்கு நைஜீ**
**தேவாலயத்திற்குள் நே**
**புகுந்த ஆயுததாரிகள் ெ**
**சுமார் 50 பேரை சரமாரி**

இந்தத் தாக்குதலில் மேலும் பலர் காயமடைந்த தாகவும் தென்மேற்கு நைஜீரி யாவின் ஒண்டோ மாகாண பொலிஸ் செய்தித் தொடர்பாளர் பன்மி

லரியோ
தெரிவி
த்தை "
என்று
இது

## ரஷ்யப் படைகள்
## மீண்டும் உ

(கீவ்)

உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்டு வரும் போர் நடவடிக்கை நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது.

ரஷ்யப் படைகளின் கடுமையான தாக்குதல் காரணமாக

பல்லாயி
உக்ரை
வெளிே
னர்.
இவ்
உக்ரை
தியத்தின்

## குரங்கு அ
## நைஜீரியாவில் காட்

(நைஜர்)

குரங்கம்மை நோய் பரவுவதை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நைஜீரிய அரசாங்கம் காட்டு விலங்குக ளின் இறைச்சிக்கு தடை விதித்துள்ளது.நைஜீரியாவில் இந்த மாதத்தில் ஆறு குரங்கம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், இந்த ஆண்டில்21நோயாளர்கள்

அடை
தெரி
இருக்
தால்
தாக ந
கு
தொற்
அது
உள்ள

## ரஷ்யாவின் அச்ச
## உக்ரைனு
## ஏவுகணைகளை

(லண்டன்)

மேற்கு நாடுகளுக்கு ரஷ்யா அச்சுறுத்தல் விடுத்துள்ள போதிலும், பிரித்தானியா தனது முதல் தொகுதி நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைனுக்கு அனுப்பவுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் பென்வாலஸ் தெரிவித்துள்ளார்.

எம்.270 பல ஏவுகணை

றொக்
விற்கு
தற்கா
என
ஆ
கள்
பிரித்
திப்ப
அது
இருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# யாவில் ஆயுததாரிகள் கொடூரம்!
## ட்டு ஸ்தலத்தில் 50 பேர் சுட்டுக்கொலை!

**நைஜீரியாவில் உள்ள கத்தோலிக்க ர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட ரமாரியாக சுட்டுக் கொன்றனர்.**



லாயோ இபுகுன் ஒடுன்லாமி தெரிவித்தார். இந்த சம்பவ த்தை "ஒரு பெரிய படுகொலை" என்று அவர் விவரித்தார்.

இது மீண்டும் நடக்க அனுமதிக்க கூடாது எனவும் அவர் தெரிவித்தார். தாக்குதல் நடத்தியவர்கள் யார்? அவர்களின் நோக்கம் என்ன? என்பது குறித்த விபரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

இதேவேளை, இந்தத் தாக்குதல் கொடூரமானது என நைஜீரிய ஜனாதிபதி முஹம்மது புஹாரி கண்டனம் தெரிவித்துள்ளார். நைஜீரியா வட கிழக்கில் இஸ்லாமிய கிளர்ச்சிக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இங்கு இது போன்ற தாக்குதல்கள், கடத்தல்கள் சாதாரணமானவை. எனினும் தென்மேற்கில் இடம்பெற்றது போன்ற தாக்குதல்கள் அரிதானவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கள் கைப்பற்றிய இடங்கள்
## ம் உக்ரைன் வசம்



பல்லாயிரக்கணக்கான மக்கள் உக்ரைனை விட்டு அகதிகளாக வெளியேறி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் உக்ரைனின் லூஹான்ஸ் பிராந்தியத்தின் செவெரோடோனெஸ்ட் நகரில், எண்பது வீதமான நிலப்பரப்பை கடந்த சில வாரங்களாக ரஷ்யப் படைகள் ஆக்கிரமித்து வைத்திருந்தன என்றும், அப்பகுதியில் தொடர்ந்தும் நடைபெற்று வந்த சண்டையின் பின்னர், தற்போது உக்ரைன் படைகள் தாம் இழந்த, எண்பது வீதத்தில் அரைவாசிப் பகுதியை கைவசப்படுத்தியிருப்பதாகவும், மேற்படி போரில், ரஷ்யப் படைகள் கடும் இழப்புக்களை சந்தித்து வருவதாகவும் உக்ரைன் இராணுவத்தின் பிராந்திய கட்டளைத் தளபதி செர்கி ஹெடை தெரிவித்துள்ளார். (நி-6)

## அம்மை அச்சத்தால்
## காட்டு விலங்கு இறைச்சிக்குத் தடை

அடையாளம் காணப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த தொற்று இருக்கும் விலங்குகளை உண்பதால் நோய் பரவ வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குரங்கம்மை மிதமான வைரஸ் தொற்று என்பதோடு நைஜீரியாவில் அது ஒரு பிராந்திய நோயாகவே உள்ளது. இது வெப்பமண்டல காடுகளுக்கு அருகில் இருக்கும் தொலைதூர பகுதிகளிலேயே ஏற்படுகிறது.

ஆபிரிக்க பிராந்தியத்தின் நோயாக இருக்கும் குரங்கம்மை ஐரோப்பாவில் அண்மையில் அதிகரித்து வருவதற்கான காரணத்தை கண்டறிவதில் விஞ்ஞானிகள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அச்சுறுத்தலுக்கு மத்தியிலும்
## னுக்கு நீண்ட தூர
## ளை அனுப்பும் பிரித்தானியா

ரொக்கெட் அமைப்பு ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைன்தன்னை தற்காத்துக் கொள்ள உதவும் என அவர் தெரிவித்தார்.

ஆனால், எத்தனை ஆயுதங்கள் அனுப்பப்படும் என்பதை பிரித்தானியா அரசாங்கம் உறுதிப்படுத்தவில்லை. ஆனால் அது ஆரம்பத்தில் மூன்றாக இருக்கும் என கூறப்படுகின்றது.

அமெரிக்காவுடன் உறுதியளிப்புக்கு பின்னதாக, கடந்த வாரம் ரொக்கெட் அமைப்பை வழங்குவதாக பிரித்தானியா அறிவித்தது.

எதிர்வரும் வாரங்களில் லொஞ்சர்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து உக்ரைன் இராணுவத்திற்கு பயிற்சி அளிக்கப்படும் என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (நி-6)


## வட கொரியாவுக்கு பதிலடி
# தென் கொரியா- அமெரிக்கா இணைந்து ஏவுகணை பரிசோதனை

(வோஷிங்டன்)

தென் கொரியா மற்றும் அமெரிக்கா இணைந்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை தென் கொரியாவின் கிழக்குக் கடற்கரையில் அடுத்தடுத்து 8 ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட ஏவுகணை சோதனை உட்பட வட கொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வரும் நிலையில் அதற்குப் பதிலடியாக இந்த ஏவுகணை சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக தென் கொரிய பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வட கொரியாவின் இலக்குகளை துல்லியமாக தாக்கக்கூடிய திறன் மற்றும் தயார் நிலையை நிரூபிக்கும் வகையில் இந்தச்



சோதனைகள் இடம்பெற்றதாக தென் கொரிய இராணுவத்தை மேற்கோளிட்டு தென் கொரியாவின் யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வட கொரியாவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவுள்ளதாக கடந்த மாதம் பதவியேற்ற தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் உறுதியளித்தார்.

அத்துடன், தென் கொரியா மற்றும் அமெரிக்கா இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சிகள் மற்றும் ஒருங்கிணைந்த பதிலளிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் கடந்த மாதம் தென் கொரியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் ஆகியோர் உடன்பட்டனர்.

இவ்வாறான நிலையிலேயே வட கொரியாவுக்கு பதிலடியாக் அடுத்தடுத்து 8 ஏவுகணைகளை ஏவி தென் கொரியா மற்றும் அமெரிக்காவின் இராணுவத்தினர் சோதனை நடத்தியுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள் ஆரம்பம்

# ஆசிரியர்கள், மாணவர்கள் போக்குவரத்திற்கு சிரமம்

(கண்டாவளை)

**கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் திறக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பல பாடசாலைககளில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிரமங்களை எதிர்நோக்கியே பாடசாலைகளுக்கு செல்கின்றனர்.**



சகல பாடசாலைகளின் முதலாம் தவணைக்கான இரண்டாம் கட்ட கல்விச் செயற்பாடுகளுக்காக நேற்று பாடசாலைகள் திறக்கப்பட்டன.

இந்த நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலையேற்றம் காரணமாக போக்குவரத்துக்கள் ஐம்பது வீதத்தால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் பெரும்பாலான பகுதிகளுக்கான போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பெரும்பாலான மாணவர்களின் பெற்றோர்கள் தினக்கூலி செய்யும் வருமானமற்ற குடும்பங்களாக காணப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் இந்த மாணவர்களின் கல்வி தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் அக்கறை காட்ட வேண்டும் எனவும் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-315)

## முருங்கைக்காய் திருடர்கள் தப்பியோட்டம்

(கரணவாய்)

வடமராட்சியில் முருங்கைக்காய் திருட முற்பட்டவர்கள் சைக்கிளையும் விட்டு தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு உடுப்பிட்டி இமையாணன் கிழக்கு செம்பாட்டு ஒழுங்கை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் முருங்கைத் தோட்டம் உள்ளது. முருங்கைத்தோட்டத்தில் திருடர்கள் உள்நுழைந்து முருங்கைக்காய்களை திருடிக் கொண்டிருந்த போது தோட்ட உரிமையாளர் தோட்டத்தை கண்காணிக்க வந்த போது, திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

அவர்களிடமிருந்து இரண்டு சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-6-60)

## பாடசாலை சமூகம் வீதிக்கு இறங்கும்

### இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என அனைவரும் "போகமாட்டோம் பாடசாலைக்கு" என்ற கோசத்தோடு வீதியில் இறங்கும் நிலை ஏற்படுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன் மீண்டும் நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், போக்குவரத்து சீரில்லை. மாணவரின் போசணைக்கு வழியில்லை, ஆசிரியர்களின் பயணத்திற்கு மார்க்கமில்லை. இதற்கு மேலதிகமாக இன்னும்பல கஷ்டங்கள். இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு பாடசாலைகளை நடத்தி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்க இன்றைய காலத்திற்குப் பொருத்தமான இலகுவான பொறிமுறைகளை முன்வைத்தோம்.

எமது கோரிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்தாவிட்டால் எல்லோரின் மன நிலையிலும் விரக்தி ஏற்பட்டு அனைவரும் வீதியில் இறங்குவோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6-33)

## வவு.சூரிய மின் உற்பத்தி நிலையத்தில் தீப் பரவல்



(நெளுக்குளம்)

வவுனியா கள்ளிக்குளத்தில் அமைந்துள்ள சூரிய மின் உற்பத்தி நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு தீப்பரவல் ஏற்பட்டது.

இதன்போது அவ் நிலையத்தில் புதிதாக பொருத்துவதற்கென வைக்கப்பட்டிருந்த சூரிய ஒளி மின்உற்பத்தி உபகரணங்கள் தீப்பற்றி எரிந்தன.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா நகர சபை தீயணைப்பு படையினர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும் புதிதாக பொருத்துவதற்கென வைக்கப்பட்டிருந்த சூரிய மின்கலங்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-299)


## வற்றாப்பளை ஆலயத்திற்காக விசேட பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை உற்சவத்திற்காக வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபை ஏற்பாடு செய்துள்ள விசேட பேருந்து சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பயணம் மேற்கொள்ளும் அடியார்கள், யாழ்சாலை-077 105 8150, பருத்தித்துறை-077 105 8130, காரைநகர்-077 105 8120, கிளிநொச்சி-077 105 8170, முல்லைத்தீவு-077 105 8190, மன்னார்-077 105 8140, வவுனியா-077 105 8160 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு தமது பயணங்களை மேற்கொள்ள முடியும் எனவும் மேலதிக தகவல்களுக்கு 077 105 8101 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ள முடியும் என கோண்டாவில் பலாலி வீதி இ.போ. சபை பிராந்திய முகாமையாளர் செ.குலபாலசிங்கம் அறிவித்துள்ளார். (4-6)

## முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் வீதி சமிக்ஞை அமைக்க கோரிக்கை



(நெளுக்குளம்)

பரந்தன் - முல்லைத்தீவு செல்லும் வீதியில் வட்டுவாகலில் அமைந்துள்ள பாலத்தில் வீதி சமிக்ஞை இல்லாததனால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

குறித்த வீதியில் அமைந்துள்ள பெரிய பாலத்தினூடான போக்குவரத்தில் பெரிய வாகனம் ஒன்றே பயணம் செய்ய முடியும். ஏனைய வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு குறித்த வாகனம் வீதியை கடந்ததன் பிற்பாடே பயணம் செய்ய முடியும்.


ஆகவே இவ் பாலத்தில் வீதியின் இரு பக்கங்களிலும் சமிக்ஞை விளக்குகள் அமைக்காததால் வாகன சாரதிகள் பெரும் இடர்களை எதிர்கொள்வதாகவும் குறித்த பாலத்தின் இரு பகுதிகளிலும் வீதி சமிக்ஞைகளை அமைத்து தருமாறும் கோரியுள்ளனர். (4-6-299)



கிளிநொச்சி மற்றும் வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த யாழ்.இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் இந்திய அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகளை மக்களுக்கு வழங்கி வைத்தார். (படம்: யதுபாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களிடையே பரவும் வைரஸ் காய்ச்சல்



(கொழும்பு)

**வைரஸினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உடலில் சிவப்புக் கொப்புளங்கள் தோன்றுவதாக குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

கொழும்பு உட்பட பல பிரதேசங்களில் சிறுவர்களுக்கு வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது.

இந்நோய் இலகுவாகப் பரவும் என்றும் ஒரு தடவை தொற்றுக்குள்ளான சிறுவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது கொடிய நோயல்ல என்றும் 6 மாதம் முதல் 12 வயது வரையிலான சிறுவர்களுக்கு இந்நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அத்தோடு, பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பரசிற்றமோல் போன்றவற்றைக் குடிக்கக் கொடுத்து வீட்டில் ஓய்வெடுக்க வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# இலங்கைக்கு உருளைக்கிழங்கு வழங்கும் பங்களாதேஷ்

(கொழும்பு)

பங்களாதேஷில் மக்கள் தொகை அதிகம் உள்ள போதிலும் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வாக இலங்கைக்கு உருளைக்கிழங்கை வழங்குவதாக பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

சார்க் அமைப்பின் செயலாளர் நாயகம் எசல வீரகோனுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் போது, இலங்கையைச் சேர்ந்த எசல வீரகோன், நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தொற்று நோயும் காரணம் என்றும் பங்களாதேஷ் இலங்கைக்கு அளித்து வரும் ஆதரவைப் பாராட்டுவதாகவும் கூறினார்.

அத்தோடு, அரிசி உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதால், இலங்கைக்கு தற்போது உரம் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில், பங்களாதேஷ் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இருந்தாலும், இந்த நெருக்கடியின் போது இலங்கைக்கு உருளைக்கிழங்கு வழங்கலாம் என்று பிரதமர் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் காரணமாக ஏற்பட்டுள்ள உலகளாவிய உணவு நெருக்கடி மற்றும் ரஷ்யா-உக்ரைன் நெருக்கடி ஆகியவற்றுக்கு தீர்வாக பங்களாதேஷ் மேலும் பயிரிட் நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு வகையான விதைகளை பரிசோதித்து வருவதாகவும் தெற்காசியாவின் பொது எதிரியான வறுமையை எதிர்த்து நாடுகள் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (நி-6)

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களை அரசியலுக்குள் உள்வாங்க எண்ணியுள்ளோம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் நிலைமை இன்னும் மோசமடைந்து இருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், "நாட்டின் தற்போதைய நிலைக்கு கொவிட் காரணமில்லை. பல நாடுகள் கொவிட்டின் பின்னர் மீண்டும் முன்னேற்றப் பாதையில் பயணிக்கின்றன. பொருளாதாரத்தை தவறாக கையாண்டமையே இந்த நிலைக்குக் காரணம்.

2019 இல் பிரதமர் பதவியை இழந்தது முதல் நான் நாட்டின் பொருளாதாரம் குறித்து ஆய்வு செய்து வருகின்றேன். தற்போதையை நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை தவிர வேறு வழியில்லை.

நாட்டில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களை அரசியல் கட்டமைப்பிற்குள் உள்வாங்க எண்ணியுள்ளோம். அவர்கள் அதற்கு தயார் என்றால் அவர்கள் அந்த நடைமுறையில் இணைந்து கொள்ளலாம். அதன் மூலம் நாட்டில் தற்போது காணப்படுகின்ற பதற்றத்தை சிறிது குறைக்க முடியும்.

அவர்கள் உள்ளே வர வேண்டும். அல்லது வெளியேற வேண்டும்.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்களை தடுத்து வைப்பது, கைது செய்வது போன்ற நடவடிக்கைகள் குறித்து பதிலளித்துள்ள ரணில் விக்கிரமசிங்க நீதிபதிகளை அடிப்படையாக வைத்தே கைதுகள் இடம்பெறுகின்றன. அண்மைய வன்முறைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களே கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளித்துள்ள ரணில் விக்கிரமசிங்க சட்டத்தை எவர் மீறியிருந்தாலும் அவர்களின் தகுதியை கருத்தில் கொள்ளாமல் அவர்களை நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். விசாரணைகளின் அடிப்படையில் ராஜபக்ஷக்களிற்கும் இது பொருந்தும் என குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்

## அருட்தந்தை கிறில் காமினி

(கொழும்பு)

நாட்டுக்கு பிரயோசனமளிக்கும் அரசியல் அமைப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமலாக்கப்பட வேண்டும்.

என்றாலும் தற்போதைக்கு அதனை செய்ய முடியாத நிலை இருப்பதால் சமர்ப்பிக்க இருக்கும் 21 ஆம் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 21 ஆம் திருத்தம் ஏன் கொண்டுவரப்பட வேண்டும் என்ற தொனிப்பொருளில் மக்கள் பேரவையின் சர்வமதத் தலைவர்கள் கலந்து கொண்ட செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு 19 ஆம் திருத்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த ஜனநாயக விடயங்களை 20 ஆம் திருத்தம் இல்லாமலாக்கி, தனிஒரு நபருக்கு கீழ் வரையறை இல்லாத அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. அதன் பாதிப்பை தற்போது நாங்கள் அனுபவித்து வருகின்றோம். அதனால் 21 ஆம் திருத்தத்தின் தேவை தற்போது உணரப்பட்டு வருகின்றது. அதனால் 20 இல் இருக்கும் ஜனநாயக விரோத பொருத்தமில்லாத விடயங்களை இல்லாமலாக்கியே 21 கொண்டுவரப்பட வேண்டும். அதேபோன்று 19 ஆம் திருத்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த ஜனநாயக விழுமியங்களை மீண்டும் அரசியலமைப்பு திருத்தத்துக்குள் உள்வாங்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் 19 ஐ விட குறைந்த, பலவீனமான திருத்தங்களை கொண்டுவர அனுமதிக்க முடியாது. குறிப்பாக 19 இல் இருக்கும் இரட்டை பிரஜா உரிமை இருப்பவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளாக இருக்க முடியாது என்ற அத்தியாயத்தை 21 இலும் உள்வாங்க வேண்டும்.

அத்துடன் ஜனாதிபதி அமைச்சுப் பதவி வகிக்கும் விடத்தில், அவர் பாதுகாப்பு அமைச்சு பதவியை மாத்திரம் வகிக்க முடியும். இவ்வாறு இல்லாமல் வேறு அமைச்சுக்களின் நிறுவனங்களை தனக்கு கீழ் வைத்துக்கொள்ள முடியாது.

அமைச்சர்களை மாற்றும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்க முடியாது. இந்த திருத்தங்கள் 21 இல் உள்வாங்கப்பட வேண்டும்.

மேலும் சுயாதீன நிறுவனங்களின் மீது ஜனாதிபதி மற்றும் அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாமலாக்கப்பட வேண்டும். குறிப்பாக நீதித்துறை பொலிஸ் திணைக்களம் என்பவற்றில் அரசியல்வாதிகளின் தல்லயீட்டை இல்லாமலாக்க வேண்டும்.

அப்படியானால்தான் நீதியை நிலைநாட்ட முடியும். எனவே நாட்டுக்கு பிரயோசனமான அரசியல் அமைப்பு திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டுமாக இருந்தால், நிறைவேற்று ஜனாதிபதி முறை முழுமையாக இல்லாமலாக்கப்பட வேண்டும்.

என்றாலும் தற்போதுள்ள நிலைமையில் அதனை செய்ய முடியாமல் இருப்பதால் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 230 | 130 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 550 | 800 |
| தக்காளி | 800 | 750 | 800 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 140 | 150 |
| கோவா | 350 | 300 | 300 | 350 |
| கரட் | 200 | 350 | 380 | 400 |
| பூசணி | 140 | 120 | 120 | 140 |
| புடோல் | 280 | 220 | 200 | 280 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 480 | 500 | 300-600 | 600 |
| பெரிய வெங்காயம் | 230 | 220 | 220 | 240 |
| பாகற்காய் | 700 | 700 | 600 | 600 |
| வெண்டக்காய் | 180 | 180 | 160 | 360 |
| கருணைக் கிழங்கு | 230 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 240 |
| லீக்ஸ் | 250 | 240 | 280 | 300 |
| பீற்றூட் | 350 | 300 | -- | 480 |
| கறிமிளகாய் | 500 | 350 | 370 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 900 | 1000 | 1400 |
| போஞ்சி | 800 | 650 | 750 | 800 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 120 |
| தேசிக்காய் | 800 | 500 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-70 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 300 | 180 | 220 |
| வெங்காயப்பூ | 650 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 180 | 200 | -- | 300 |
| பொன்னாங்கண்ணி | 70 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | -- | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மன்னாதி மன்னன்



(நேற்றைய தொடர்ச்சி)

அமுதன் தலைநகரின் வீதிகளில் திரிந்து யார் யார் அநியாயக்காரர் என விசாரித்துத் தெரிந்து கொண்டான் அப்படிப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கில் இருப்பது கண்டு அவன் மனம் மிகவும் வருந்தியது. முதலில் அமுதன் அவ்வூரின் மிகப் பெரிய வியாபாரியின் வீட்டை அடைந்தான்.

அவன் அந்த வியாபாரியின் முன் நின்றதுமே அவனது மோதிரக் கல் நீல நிறமாக மாறியது. அப்போது அவன் அந்த வியாபாரியிடம் "நீ அநியாய வழியில் பணம் சம்பாதிக்கிறாய். அதற்குத் தண்டனையாக ஒவ்வொரு மாதமும் எனக்குப் பத்தாயிரம் வராகன்கள் கொடுத்து வரவேண்டும்" என்றான். வியாபாரியோ "நீ யார்? நான் ஒன்றும் பணம் கொடுக்க முடியாது. உன்னால் முடிந்ததைச் செய்" என்று கருவினான். மறு விநாடியே அமுதன் "உன் கை கால்கள் செயலற்றுப் போகட்டும்" என்று கூறி பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தான். அவ்வளவு தான்! அந்த வியாபாரியின் கைகால் நரம்புகள் இழுக்க அவன் பொத்தென கீழே விழுந்தான். அவன் அமுதனுக்குப் பணம் கொடுத்த பிறகே முன் போல ஆனான். இப்படியே அமுதன் பல அநியாயக்காரர்களிடமிருந்து பணம் பெற்றான்.

இவ்வாறு பெற்ற பணத்தில்தான் தங்க ஒரு மாளிகையை வாங்கிக் கொண்டு அமுதன் ஏழை எளியவர்களுக்கு பணம் கொடுத்து வரலானான். அவன் ஏழைகளுக்குப் பணம் கொடுக்கிறான் என்ற செய்தி எங்கும் பரவவே அவனது வீட் டின் முன் கூட்டம் எப் போதும் இருந்தது. அவனும் சளைக்காமல் அவர்களுக்குத் தான் பெற்று வரும் பணத்தைக் கொடுத்து வந்தான்.

சில பணக்காரர்கள் மன்னனிடம் போய் அமுதன் தங்களை பயமுறுத்திப் பணம் பறிக்க முயல்கிறான் என்று புகார் செய்தனர். அமுதனைப் பிடித்து வர உத்தரவிடப்பட்டது. அதை நிறைவேற்ற ரமணன் பத்து வீரர்களுடன் சென்றான். ரமணன் "நீ எல்லோரையும் ஏமாற்றி பணம் பறிக்கிறாய். உன்னைக் கைது செய்யப் போகிறேன்" என்றான். அமுதனும் சிரித்தபடியே "ஊரை ஏமாற்றுபவன் நீதான். முதலில் உன் அநியாயச் செயல்களுக்கு என்ன பதில்? நீ உடனே இவர்களை உன் வீட்டிற்கு அனுப்பி ஐயாயிரம் வராகன்கள் எடுத்து வந்து என்னிடம் கொடுக்கச் சொல். அதற்குப் பின் மாதா மாதமும் ஐயாயிரம் வராகன்கள் கொடுத்து வர வேண்டும்" என்றான்.

ரமணன் முடியாது. எனவே அமுதன் பஞ்சாட்சர மந்திரத்தை ஜெபித்து அவன் கை கால்கள் செயலற்றுப் போகட்டும் என்றான். மறு நிமிடமே ரமணன் பொத்தெனக் கீழே விழுந்தான். அவனால் எழுந்திருக்க முடியவில்லை. ரமணன் உடனே வீரர்களைத் தன் வீட்டிற்கு அனுப்பி ஐயாயிரம் வராகன்கள் கொண்டு வரச் செய்தான். அதை அவன் அமுதனிடம் கொடுத்ததும் அவன் முன் போலாகி எழுந்து நடந்தான். (தொடரும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




அப்பொழிலில் இருந்த மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்தான். அவற்றை விண்ணில் எறிந்து வீடுகளில் விழச் செய்தான்.

ஊருக்குள் நுழைந்தான்; விண்ணை முட்டும் மாடங்களை எரியிட்டுக் கொளுத்தினான்; யானை, குதிரை, தேர் இப்படைகள் இருந்த கொட்டில்களை எட்டி உதைத்து, அழிவு செய்தான்; வேள்வி மண்டபங்கள் வேதியர் இல்லாமலேயே நெருப்புகளைக் கக்கின.

யார் இது செய்தது? என்ற கேள்விகள் எழும்படி அரக்கர் அழிவுகளைச் சந்தித்தனர். சீதைக்குச் சோகம் விளைவித்த அசோக வனம், எரிதழலுள் வைகியது; அதனைக் காவல் செய்த பருவத் தேவர் உருக்குலைந்து ஓடினர்; சித்திர நகரின் எழில் சிதைந்து போனது; அரக்கர் அழிவு கண்டு ஓலமிட்டனர்; இராவணனிடம் சென்று முறையிட்டனர்.

### கிங்கரர் வளைத்தல்

செய்தி அறிந்து, செல்வக் கோமான் இராவணன், கிங்கரரை அழைத்து அவனை வளைக்குமாறு ஏவினான். தோரண வாயிலில் இருந்த கணைய மரத்தைக் கொண்டு கிங்கரரைத் தாக்கினான்; அவர்கள் உயிரைப் போக்கினான்.

சம்புமாலி என்ற படை வீரன் அனுமனை அணுகினான்; அவன் படையுடன் அழிந்து இடம் தெரியாமல் மறைந்தான்; "பஞ்ச சேனாதி பதியர்" என்ற படைத் தலைவர் அவனிடம் மோதிப் பஞ்சாய்ப் பறந்தனர்.

இராவணன் இளைய மகன், அக்ககுமரன் களம் நோக்கிக் கால் வைத்தான்; அவன் படைகள் அக்கு வேறு ஆணி வேறாய்ச் சிதைந்தன; அனுமன் அவனைக் காலால் தரையொடு தரையாய்த் தேய்த்தான். அவனும் வீரமரணம் அடைந்தான்.

அக்ககுமரன் இறந்த செய்தி மண்டோதரியைக் கையறு நிலை பாட வைத்தது; ஒப்பாரி வைத்து அழ வைத்தது, இராவணன் கடுஞ்சினம் கொண்டான்; தம்பி இறந்த செய்தி கேட்டு இந்திரசித்து, மிக்க சீற்றம் கொண்டான்; போர்மேற் சென்றான்; அவன் தேர் தரையோடு தரையாயிற்று;

படைகள் இழந்து பார் வேந்தன் மகன் தன் கையில் இருந்த மந்திர வலிமை வாய்ந்த பிரமாத்திரத்தை ஏவினான்; அதன் மந்திர சக்திக்கு ஆட்பட்டு அனுமன், அடங்கிக் கட்டுண்டான்; கட்டுண்டான் என்பதை விடக் கட்டுப்பட்டான் என்பதே பொருத்தம்; அடங்கியவன் போல் நடித்தான்.

நடிப்பு வெற்றி தந்தது; நாலு தெருக்கள் வழியே அவனை இழுத்துச் சென்றனர். "அவனைக் கொல்லாமல் இழுத்து வருக" என்று இராவணன் ஆணையிட்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள். - டால்ஸ்டாய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஏழை மக்களை கொல்லவோ இச்செயல்

நாட்டில் அரசாங்கம் இருக்கிறதா? என்று கேட்குமளவிலேயே நிலைமை உள்ளது.

ஆம், பிரதமர் பதவிக்கு ஆசைப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றுவதன் மூலம் தனது பதவி ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்.

ஆனால் நாட்டில் மக்கள் படும்பாடு சொல்லிமாளா.

உண்மை, கண் மண் தெரியாதளவில் பொருட்களின் விலைகள் உயர்த்தப்படுகின்றன.

இவ்வாறு விலையை உயர்த்துவதற்கு ஏதுவாக இரண்டு கிழமைக்கு மட்டுமே அரிசி கையிருப்பில் உள்ளது என்றவாறு கதைகள் விடப்படுகின்றன.

இரண்டு வாரங்களுக்கு மட்டுமே அரிசி கையிருப்பில் இருக்கிறது என்ற கணக்கெடுப்பை யார் நடத்தியது.

இவ்வாறு அறிக்கை விடுவதற்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

அரசாங்கம் என்ற ஒன்று இருக்குமாயின், இரண்டு வாரங்களுக்கு மட்டுமே அரிசி கையிருப்பில் உள்ளதென்று அரிசி ஆலைகளின் உரிமையாளர் சங்கம் கூறமுடியுமா?

அரிசியின் விலையைக் கண்டபாட்டில் அதிகரிப்பதற்காக அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் வஞ்சகத்தனத்தை விதைத்துள்ளது.

அரிசி ஆலைகளில் இரு வாரங்களுக்கு மட்டுமே அரிசி கையிருப்பில் இருக்குமாயின், அதுபற்றி அரசாங்கத்துக்கு அறிவித்துவிட்டு அமைதியாக இருப்பதுதான் சங்கத்தின் கடமையாக இருந்திருக்க வேண்டும்.

ஏனெனில் நாட்டில் அரிசியின் கையிருப்பு என்பது தனித்து அரிசி ஆலைகளில் மட்டும் தங்கி இருப்பதில்லை.

மாறாக அரச களஞ்சியங்கள், வர்த்தக நிலையங்கள், நெற்சந்தைப்படுத்தும் அமைப்புகள், தனிநபர்கள் எனத் தேசிய ரீதியான அமைப்புகளிடமும் வீட்டுத் துறையினரிடமும் அரிசியும் நெல்லும் கையிருப்பில் இருக்கும்.

உதாரணத்துக்கு வடபகுதியில் குறைந்தது இரண்டு வருடங்களுக்குப் போதுமான நெல் வீட்டுத்துறையினரிடம் இருப்பதான தகவல்கள் உண்டு.

நிலைமை இதுவாக இருக்கையில், இன்னும் இரண்டு வாரங்களுக்குப் போதுமான அரிசி மட்டுமே கையிருப்பில் இருப்பதாக அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் விடுத்த அறிவிப்பு,

ஏதோ நாட்டில் இன்னும் இரண்டு வாரங்களுக்குப் போதுமான அரிசி மட்டுமே கையிருப்பில் இருப்பது போன்ற செய்தியாகப் பரவ,

அரிசியைப் பதுக்கி வைப்பதிலும் அரிசியின் விலையைக் கண்டபாட்டில் அதிகரிப்பதிலும் சம்பந்தப்பட்டவர்கள் தீவிரம் காட்டத் தலைப்பட்டுள்ளனர்.

எனவே பூனை இல்லாத வீட்டில் எலிகள் சன்னதம் ஆடுவது போன்ற நிலைமை இந்த நாட்டில் ஏற்பட்டுவிட்டது.

இதன் விளைவு பஞ்சம் பட்டினியை ஏற்படுத்தி, ஏழை மக்களைக் கொல்வதாகவே இருக்கும்.

இதை அனைவரும் பொறுப்போடு புரிந்து கொண்டு தர்மத்தோடு செயலாற்ற வேண்டும்.

## வெளிநாட்டு வேலையை எதிர்பார்க்கும் அரச சேவையாளர்கள் இணையத்தளம் மூலம் தகவல் வழங்க முடியும்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை எதிர்பார்க்கும் அரச சேவையாளர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் இணையத்தளம் மூலம் தங்கள் தகவல்களை வழங்க முடியும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்தோடு அரச சேவையாளர்களுக்கு தகுதியான வேலைவாய்ப்புகளை வெளிநாடுகளில் இருந்து பெற்றுவருமாறு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையை சமாளிக்க வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் வீதத்தை அதிகரிக்க முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் ஒரு கட்டமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அரச சேவையாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் பொழுது அவர்களின் ஓய்வூதியம் மற்றும் அவர்களின் தொழில் தொடர்பில் எந்த பாதிப்பும் வராத வகையில் ஒரு சுற்றறிக்கையை வெளியிடவும் ஏனைய அமைச்சுக்களுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## நாட்டை விட்டு வெளியேறும் அறிவார்ந்த இளைஞர்கள்

### சஜித் கவலை

(கொழும்பு)

நாட்டை விட்டு அறிவார்ந்த இளைஞர்கள் வெளியேறி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் விமான நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் பாதை வரைபடம் என்பன உரிய நேரத்தில் அமுல்படுத்தப்படாவிடில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் அதற்கு புதிய ஆணையுடன் நிலையான அரசாங்கம் தேவை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## குழந்தைகளுக்காக வாங்கிய உணவுப் பொருட்கள் திருட்டு

### கதிர்காமத்தில் சம்பவம்

வறுமையில் வாடும் பெண்ணொருவர், தனது குழந்தைகளுக்காக கொள்வனவு செய்த அரிசி மற்றும் உணவுப்பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கதிர்காமம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

ஒரு கிலோ அரிசி, 250 கிராம் சீனி, 200 கிராம் கருவாடு மற்றும் குழந்தைகளுக்காக வாங்கிய பிஸ்கட் என்பனவே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன. (4-7)

## ரின் மீனின் விலையும் அதிகரித்தது

(கொழும்பு)

சந்தையில் தற்போது பெரிய ரின் மீன் ஒன்றின் விலை 600 ரூபாயாக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக நுகர்வோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் சந்தையில் இது வரை விற்பனை செய்யப்பட்டு வந்ததை விட தற்போது மிக அதிக விலைக்கு ரின் மீன் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதுவரை ஒரு பெரிய ரின் மீனின் விலை 450 முதல் 500 ரூபாய் வரை இருந்தது.

மேலும் முட்டை, இறைச்சி, மீன், உலர் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் விலைகள் மேலும் உயர்ந்துள்ளதால் நுகர்வோர் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை 8 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** சீனோர் கடகுதுறை-காரைநகர், கடற்படைதளம்-காரைநகர், காரைநகர் கடற்படைமுகாம், ஆலடி -காரைநகர், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி, கோவலம்-காரைநகர், மருதபுரம்-காரைநகர், காரைநகர் தபால் அலுவலகம், பாலக்காடு அம்மன் கோவிலடி-காரைநகர், சிவகாமி அம்மன் கோவிலடி-காரைநகர், தோப்புக்காடு-காரைநகர், ஊரி-காரைநகர், வலந்தலை-காரைநகர், வியாவில் கருங்காலி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அந்தோனியார்புரம், இல்லுப்பைக்கடவை, கள்ளியடி, முதலியார்குளம், இல்லுப்பைகடவை, தேத்தவாடி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** மாந்தை சந்தி (திருக்கேதீஸ்வரம் கிராமம்), நாகத்தாழ்வு திருக்கேதீஸ்வரம், திருக்கேதீஸ்வரம் மருத்துவமனை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### கோயிலை விட உயர்ந்தது மனித உடல்

❖ கடவுளை வழிபடுவதற்கு நீங்கள் ஏதாவது புதிய உருவைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் அதை விட நல்ல உருவம் ஒன்று உள்ளது. அது மனிதனின் உடல்தான். கடவுளை வழிபட் நீங்கள் கோயில் கட்டலாம். ஆனால் அதை விட மிகவும் உயர்ந்தது மனித உடல். எப்படியென்றால் இந்த பிரபஞ்சம் முழுவதுமே கோயில்தானே? மனிதன் எங்கு வேண்டுமானாலும் வழிபடலாம் அல்லவா? அதுதான் வாழுகின்ற மனித உடல், உயிரற்ற சின்னங்களை வழிபடுவதை விட இது மிகவும் மேலானது. மேலும் மனிதனின் மூலமாகவே இறைவனை அறிய முடியும்.

❖ தெய்வங்கள் தங்களைப்போல் மனிதனைப் படைப்பதில்லை. இதற்கு மாறாக மனிதனே தன்னைப் போன்று கடவுளைப் படைத்தான். நம் புலன்களால் கடவுளை அறிய முயன்றால் அவற்றை உருவக் கடவுளாகவே காண முடியும். நிழலே உருவக் கடவுள். உள்ளிருக்கும் ஆன்மாவை முடிந்த அளவு மிக உயர்ந்த புறக்காட்சியாகவே காட்டப்படுகிறது. நாம் நமது இதயத்திலும் பிற உயிர்களிலும் கூட கடவுளைக் காண முடியாவிட்டால் வேறு எங்கு போய் பார்க்க முடியும்?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 79

| அட்டவணை-2 | | | | |
|---|---|---|---|---|
| முன்மொழியப்பட்ட தொகுதிகள் -50% | | | | |
| முன்மொழியப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை பெரும்பான்மைச் சனத்தொகையின்படி | | | | |
| மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
| மேல் | 46 | 2 | 3 | 51 |
| மத்திய | 23 | 5 | 1 | 29 |
| தென் | 27 | | | 27 |
| வட | | 19 | | 19 |
| கீழ் | 4 | 7 | 7 | 18 |
| வடமேல் | 23 | | 2 | 25 |
| வட மத்திய | 16 | | | 16 |
| ஊவா | 14 | 2 | | 16 |
| சப்பிரகமுவ | 21 | | | 21 |
| மொத்தம் | 174 | 35 | 13 | 222 |

3. **எதிர்பார்க்கப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை (50%) எதிர் முன்மொழியப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை** (50%).

இனக் குழுமங்களின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை: சிங்களவர்-166, தமிழர்-40, முஸ்லிம்-16.

(அட்டவணை-3 ஐப் பார்க்க). இனக் குழுமங்களின் அடிப்படையில் புதிதாக உருவாக்கப்பட்ட தேர்தல் தொகுதிகள் / உறுப்பினர்கள் எண்ணிக்கை: சிங்களவர்-174, தமிழர் - 35, முஸ்லிம் - 13.

(அட்ட வணை-2 ஐப் பார்க்க).

| அட்டவணை-3 | | | | |
|---|---|---|---|---|
| இன அடிப்படையில் -50% எதிர்பார்க்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | | | | |
| மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
| மேல் | 46 | 2 | 3 | 51 |
| மத்திய | 19 | 8 | 2 | 29 |
| தென் | 27 | | | 27 |
| வட | | 19 | | 19 |
| கீழ் | 4 | 7 | 7 | 18 |
| வடமேல் | 22 | | 3 | 25 |
| வட மத்திய | 15 | | 1 | 16 |
| ஊவா | 14 | 2 | 0 | 16 |
| சப்பிரகமுவ | 19 | 2 | 0 | 21 |
| மொத்தம் | 166 | 40 | 16 | 222 |

| அட்டவணை-4 | | | | |
|---|---|---|---|---|
| இன அடிப்படையில் (அதிகம்/குறைவு) அட்டவணை-2 ஐயும் 3 ஐயும் ஒப்பிடல் | | | | |
| மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
| மேல் | 0 | 0 | 0 | 0 |
| மத்திய | 4 | -3 | -1 | 0 |
| தென் | 0 | 0 | 0 | 0 |
| வட | 0 | 0 | 0 | 0 |
| கீழ் | 0 | 0 | 0 | 0 |
| வடமேல் | 1 | 0 | -1 | 0 |
| வட மத்திய | 1 | 0 | -1 | 0 |
| ஊவா | 0 | 0 | 0 | 0 |
| சப்பிரகமுவ | 2 | -2 | 0 | 0 |
| மொத்தம் | 8 | -5 | -3 | 0 |

அட்டவணை-4 ஆனது இவ்விரு அட்டவணைகளுக்கும் இடையே உள்ள எண்ணிக்கை வித்தியாசத்தை (அதிகம்/குறைவு) தருகிறது.

**4.போனஸ் ஆசனங்களின் தொகையை ஐந்தாக அதிகரித்தல்.**

புறந்துருத்தி ஆசனங்களைக் (overhang) கொண்ட கலப்புத் தேர்தல் முறை ஸ்திரமற்ற மாகாண அரசை உருவாக்கவே வழி வகுக்கும். போனஸ் ஆசனங்களின் எண்ணிக்கையை இரண்டிலிருந்து ஐந்தாக அதிகரிப்பதன் மூலம் ஸ்திரமான மாகாண அரசை உருவாக்க முடியும்.

இதனை கீழே குறிப்பிட்ட அடிப்படை வரம்புகளின் கீழ் செய்வதன் மூலம் இன உறுப்பினர்களின் (தமிழர் மற்றும் முஸ்லிம்) எண்ணிக்கையை அதிரிக்க முடியும்.

அடிப்படை வரம்பு (Criteria): மாகாண அரசை உருவாக்கும் கட்சிக்கு 5 போனஸ் ஆசனங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

அவற்றுள் 2 அம்மாகாணத்திலுள்ள முதலாவது பெரும்பான்மை இனத்திற்கும், 2 இரண்டாவது பெரும்பான்மை இனத்திற்கும், 1 சிறுபான்மை இனத்திற்கும் வழங்கப்பட வேண்டும்.

கடைசியாக நடந்த சனத்தொகை கணிப்பீட்டின்படி பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனம் தெரிவு செய்யப்பட வேண்டும்.

இவ் அடிப்படை வரம்பு (Criteria) சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

ஒன்பது மாகாணங்களுக்கிடையே இவ் ஐந்து ஆசனங்களும் பகிரப்படும் முறையை அட்டவணை-5 காட்டுகிறது. இம்முறை அமுல் செய்யப்பட்டால், 267 உறுப்பினர்களில், சிங்களவர்- 190, தமிழர்- 49, முஸ்லிம்- 28 என்ற எண்ணிக்கையில் வர முடியும்.

மேலும் சிறுபான்மை சமூகத்தினர் இன்னும் சில ஆசனங்களை விகிதாசார பட்டியல் மூலமும் பெற முடியும்.

இம் முன்மொழிவினால் போனஸ் ஆசனங்களின் எண்ணிக்கை 27 ஆல் (45-18=27) அதிகரிக்கும்.

மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 455 இலிருந்து 482 ஆக அதிகரிக்கும்.

| அட்டவணை-5 | | | | |
|---|---|---|---|---|
| போனஸ் ஆசனங்கள் | | | | |
| பெரும்பான்மை | | | | 2 |
| 2வது பெரும்பான்மை | | | | 2 |
| சிறுபர்ன்மை | | | | 1 |
| மொத்தம் | | | | 5 |
| மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
| மேல் | 2 | 1 | 2 | 5 |
| மத்திய | 2 | 2 | 1 | 5 |
| தென் | 2 | 1 | 2 | 5 |
| வட | 1 | 2 | 2 | 5 |
| கீழ் | 1 | 2 | 2 | 5 |
| வடமேல் | 2 | 1 | 2 | 5 |
| வட மத்திய | 2 | 1 | 2 | 5 |
| ஊவா | 2 | 2 | 1 | 5 |
| சப்பிரகமுவ | 2 | 2 | 1 | 5 |
| மொக்கம் | 16 | 14 | 15 | 45 |

| அட்டவணை-6 | | | | |
|---|---|---|---|---|
| முன்மொழியப்பட்ட தொகுதிகள்-50% போனஸ் ஆசனங்களைச்சேர்த்து முன்மொழியப்பட்டஉறுப்பினர்கள் எண்ணிக்கை | | | | |
| மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
| மேல் | 48 | 3 | 5 | 56 |
| மத்திய | 25 | 7 | 2 | 34 |
| தென் | 29 | 1 | 2 | 32 |
| வட | 1 | 21 | 2 | 24 |
| கீழ் | 5 | 9 | 9 | 23 |
| வடமேல் | 25 | 1 | 4 | 30 |
| வட மத்திய | 18 | 1 | 2 | 21 |
| ஊவா | 16 | 4 | 1 | 21 |
| சப்பிரகமுவ | 23 | 2 | 1 | 26 |
| மொத்தம் | 190 | 49 | 28 | 267 |

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளவி...

முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது சடுதியாக குளவிகள் இவரை கொட்டிய நிலையில் மயக்கமடைந்த அவரை பொது மக்கள் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும் அவர் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். (4-7)

## யாழ்.மாவட்ட...

களது பயிர்ச்செய்கை நிலங்களின் அடிப்படையில் முன்னர் எரிபொருள் அட்டை வழங்கப்பட்டது.

அந்த அட்டையைக் காண்பித்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இன்று முதல் மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முதல் கட்டமாக விவசாயிகளின் தேவை அளவின் 25 சதவீத மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, எரிபொருள் அட்டை இல்லாத விவசாயிகள் இன்று தத்தமது பிரதேச கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பத்து பெற்றுக் கொண்டு நாளை மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7,33)

## கொழும்பில்...

தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த சில நாட்களில் கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் 5 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதில் ஐவர் கொல்லப்பட்டனர். எனினும், இந்த தாக்குதல்களை நடத்தியவர்கள் எவரும். இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (4-7)

## இம்மாத...

ரீட்ட எரிபொருட்களின் விலையை அதிகரிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

27ஆயிரம் மெற்றிக்தொன் 92 ஒக்டேன் பெற்றோல் மற்றும் 12 ஆயிரம் மெற்றிக்தொன் ஒக்டேன் 95 என்பன போதுமான அளவு கையிருப்பில் இருக்கின்றபோதிலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விநியோகத்தை குறைத்துள்ளது.

டீசலை பொறுத்தவரையில், தற்போதுள்ள அதன் இருப்பு ஐந்து நாட்களுக்கு போதுமானதாக இருக்கும். இந்நிலையில் இந்தியாவிலிருந்து டீசல் இறக்குமதி செய்யப்படும் வரை, மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகமே மேற்கொள்ளப்படும் என்றும் பாலித குறிப்பிட்டுள்ளார். (4-7)

## கடிதம் எழுதி...

காலையில் வீட்டில் காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வீட்டில் இருந்த பணம், தந்தையின் தொலைபேசி என்பன காணாமல் போயுள்ள நிலையில் "தன்னைத் தேட வேண்டாம்" என கடிதம் எழுதிவைத்துவிட்டு சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சிறுமி, டிக்டொக் மூலம் ஹட்டன் பகுதியினை சேர்ந்த ஒருவரைக் காதலித்துள்ளதாகவும், காதலனை தேடி சென்றிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (4-7)

## ஓமானிலிருந்து...

ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியாவினை நன்கொடையாக வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது ஒப்புதலை வழங்கியுள்ளார்.

இந்த தொகுதி ஓமானில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு நேரடியாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (4-7)

## பதவிக்காலம்...

அத்துடன், தம்மை பதவி விலகுமாறு கோரி நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளபோதும், தமது பதவிக்காலத்தில் எஞ்சியுள்ள இரண்டு வருடங்களை நிறைவு செய்வதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

நாட்டை மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடி[illegible] நிதி பிரச்சினைக்கு தீர்வு காண[illegible]

# பாக்லே - பீரிஸ் சந்திப்பு

(கொழும்பு)

இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்படும் உணவு, எரிபொருள், உரம் மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் உட்பட ஏனைய உதவிகள் குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிசுக்கு விளக்கமளித்துள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிசுடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது இருதரப்பு ஈடுபாடுகள் மற்றும் நாட்டின் தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்பான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இலங்கைக்கு சவாலான நேரத்தில் இந்தியா வழங்கிய தாராளமான மற்றும் தொடர்ச்சியான உதவிகளுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் நன்றி தெரிவித்தார். (4-7)

அதிக கவனம் செலுத்தியுள்ளதுடன், மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இரசாயன உரம் மீதான தடை மற்றும் சேதனப்பசளை ஊடான விவசாயம் குறித்தும் அவர் இதன் போது வலியுறுத்தியுள்ளார். (4-7)

## குறைநிரப்பு...

குறித்த பிரேரணை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

சமுர்த்தி பயனாளிகள், பெருந்தோட்ட மக்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கத்தினால் நிவாரணப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

அதற்கான செலவுகளை மேற்கொள்வதற்கும் அத்தியாவசிய அரச சேவைகளை தடைகளின்றி தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கும் தேவையான நிதியை பெற்றுக்கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினால் குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறைநிரப்புப் பிரேரணை தொடர்பான விவாதம் இன்று மாலை 5.30 வரை இடம்பெறவுள்ளது. பிரேரணையை சமர்ப்பித்ததன் பின்னர், நாட்டின் தற்போதைய நிலை குறித்து விசேட கூற்றொன்றை முன்வைத்து பிரதமர் உரையாற்றவுள்ளார்.

சபை ஒத்திவைப்பு மீதான விவாதமும் இன்று இடம்பெறவுள்ளது.

அத்துடன் பாராளுமன்றம் இம் மாதம் 10 ஆம் திகதி வரை [illegible]ள்ளது. (4-7)

## அரச உத்தி...

தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் தற்போது மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச ஊழியர்கள் பணிக்கு செல்வதால் ஏற்படும் அதிக செலவைக் குறைப்பதே இதன் நோக்கம் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

எது எப்படி இருப்பினும், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு இந்தத் திட்டம் பொருந்தாது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (4-7)

தன நிதானய
திகதி - 2022.06.06
சீட்டிழுப்பு இலக்கம் - 808
Z 01 26 42 78

மஹஜன சம்பத
திகதி 2022/06/06
சீட்டிழுப்பு இலக்கம் 4778
G 5 1 8 9 0 7
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.06.06
சீட்டிழுப்பு இலக்கம் 087
தனுசு 03 46 55 57 தனுசு

மெகா பவர்
திகதி 06/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1126
O 4 27 28 36 67

கொவிசெத
திகதி 2022.06.06
சீட்டிழுப்பு இலக்கம் 3020
F 36 46 68 75
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1256
சிம்மம் 2 5 9 1 7 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1753
சீட்டிழுப்பு திகதி 2022.06.06
தினம் திங்கட்கிழமை
T 05 30 45 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,479,540/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.06
சீட்டிழுப்பு இல : 3914
ரூ. 3,306,260/-
வெற்றி இலக்கங்கள் 06 40 42 73 Z

ராசி
ரூ. 2,708,066.80
திகதி 2022-06-06
வெற்றி வாரம் 3465
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 32 34 45 55
ரூ. 10,347,686.80

12 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 16 43 52 64 71
சீட்டிழுப்பு வாரம் 929
திகதி 2022.06.06 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 240,614,101/-
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1579
சீட்டிழுப்பு திகதி : 2022.06.06
ரூ. 3,188,700/-
09 60 70 72 Z

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11729)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாக் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

**தரகர் தேவையில்லை** (11778)

**பார்வையிடும் நேரம்**
**காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை**

**077 814 7389,**
**077 241 7589 - ஜெயம்**

## தேவை

Tuition Center அமைப்பதற்கு தேவையான பொக்ஸ் பார் (Box bar), L கேடர், தகரம் மற்றும் தளபாடங்கள், கொட்டகைகள் விற்பனைக்கு இருப்பின் அறியத்தரவும். (11782)

**077 430 7829**
**076 236 3470**

## கணக்கீடு

பிரத்தியேக வகுப்பு

இல. 17, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்.

**A/L 2024** (11781)

ஆரம்பம் : நாளை 4.00 p.m

ஆசிரியர் : S. தவா
B.Com (Hons) (Acc.Spl), PGDE, M.A in Edu. (Hons)

( A/L 2022, 2023 தனிப்பட்ட, குழு வகுப்புக்களும் உங்கள் நேர அடிப்படையில் நடைபெறுகின்றன. )

**077 239 5858**

## Inner Circle JOB VACANCY

எங்கள் வளர்ந்துவரும் வணிகக் குழுவில் சேர நீங்கள் தயாரா?

TELE CALLER & BIKE RIDER?



- Training
- Recognition
- Rewards
- Secondary Education
- Good Salary Package (குறைந்தது 45,000/=)

(11780)

தகைமை : O/L, A/L
வயது : 18 - 28
Jaffna, Vavuniya, Kilinochchi, Mannar

இல. 100/3, முட்டாசு கடைச் சந்தி, யாழ்ப்பாணம்.
076 770 7759

## யப்பான் சைக்கிள்

அறிவுள்ளோரின் தெரிவு



1. லேடீஸ் சைக்கிள்கள்
2. யென்ஸ் சைக்கிள்கள்
3. கியர் சைக்கிள்கள்
4. மடக்கும் சைக்கிள்கள்
5. பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. Baby சைக்கிள்கள்

இலகுவான ஓட்டம்.
பாட்ஸ் தாராளமாக உண்டு.
வருடா வருடம் கழுவிப் பூட்டுதல்,
திருத்த வேலைகள் இல்லை.
நீண்டகாலப் பாவனை.

விற்பனைக்கு பிந்திய சேவைகள் (திருத்த வேலைகள்)

(C-4447)

**யப்பான் சைக்கிள் B பசார்**
கந்தரோடை றோட், சுன்னாகம்.
(சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 500m)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4410)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## UK STUDENT VISA

**IELTS தேவையில்லை**
(நிபந்தனைக்குட்பட்டது)



DEGREE முடித்தவர்களுக்கு
1 வருட MASTER DEGREE
மற்றும்
வேலைவாய்ப்புக்கள்

(C-4410)

CIMS COLLEGE 0777-068-777

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவற்குழி சந்திக்கு அருகாமையில்
A9 வீதி முகப்புடன் 27 பரப்புக் காணி விற்பனைக்கு
நிலப்பரப்பு




- 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A9 வீதி முகப்புடன் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய பாரிய இடவசதி வீதியுடன் அமைந்துள்ளது.
- வியாபார நிலையங்கள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த நல்ல தண்ணீர் மேட்டுக்காணி.
- நாவற்குழி சந்தியிலிருந்து கைதடி செல்லும் வீதி முகப்புடன் லங்கா அசோக் லேடன் வாகன காட்சியறை நேரெதிரே அமைந்துள்ளது.

**பார்வையிடும் நேரம்**
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை (11777)

**077 623 4204, 077 288 0152**

## கண்ணீர் காணிக்கை

நன்னடத்தை உத்தியோகத்தர் பொன்னையா சிவகுமார் அவர்களின் அன்புத் தாயார்



**திருமதி பொன்னையா இரத்தினபூபதி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில் : 08.12.1943
விண்ணில் : 04.06.2022

ஆழ்ந்த துயரத்துடன்
நன்னடத்தை அதிகாரிகள் சங்கம் - வடக்கு மாகாணம். (C-4443)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 24 பரப்பு காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(11776)

**பார்வையிடும் நேரம்**
**காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை**

ஒரு பரப்பின் விலை - மூன்று இலட்சம்

தொடர்பு: 076 658 3621, 076 436 5814


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.